<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No. 75/2015 Date: 27.02.2024

PW1-கோபால்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் லாரி ஓட்டுநர் தொழில் செய்கிறேன். தாவா பரிகாரம் பற்றி தெரியும். மற்ற வாதிகள் சார்பாக நான் மட்டும் தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னை தவிர மற்றவர்கள் நீதிமன்றத்திற்கு வந்தது இல்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி முருகன் என்னுடன் பிறந்த அண்ணன். நானும் 1ம் வாதியும் முனியன், சீரங்காயி ஆகியோருக்கு பிறந்தவர்கள் என்று வழக்குரையில் சொல்லியிருந்தால் அது தவறு. பாவாயி இறந்து போன சீரங்கனின் முதல் மனைவி என்றால் சரிதான். என் அம்மா சீரங்காயி என்பவரை மயிலம்பட்டியை சேர்ந்த சித்துகுட்டி என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தனர் என்றால் சரிதான். சித்துகுட்டி என் அம்மாவிற்கு மாமன் முறை என்றால் சரிதான். ஆனால் என் அம்மா சித்துகுட்டியுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். என் அம்மாவிற்கும் சித்துகுட்டிக்கும் விவாகரத்து ஆகிவிட்டதா என்று எனக்கு தெரியாது. என் அம்மாவிற்கும் சித்துகுட்டிக்கும் திருமணம் ஆன விவரம் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியும். அந்த விவரம் இந்த வழக்குக்கு தேவையில்லை என்பதால் அது பற்றி குறிப்பிடவில்லை. சித்துகுட்டியும் சீரங்காயும் விவாகரத்து பெற்றதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சீரங்காயி சீரங்கனுக்கு 2வது மனைவி என நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் மொத்தம் 3 அயிட்டம். அதில் 1வது அயிட்ட சொத்தின் ச.எண்.27/3, 27/4. அவற்றின் விஸ்தீரணங்கள் எனக்கு தெரியாது. மேற்படி சொத்துக்களின் பட்டா எண்.70 அது கூட்டு பட்டாவாக உள்ளது. முனியன், சீரங்கன், ஆராயம்மாள் பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்தின் ச.எண்.27/5. 3வது அயிட்ட சொத்தின் ச.எண்.27/7. தாவா சொத்துக்கள் தேவூர் கிராமத்தில் மையிலம்பட்டியில் உள்ளது. மேற்குறிப்பிட்ட சொத்துக்களை தவிர நான் வேறு சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ச.எண்.27/3, 27/4 ல் செங்கோட்டையன் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். என்னை கேட்டு தான் கட்டினார். நான் அந்த வீட்டை சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றால் சரிதான். அதே சொத்தில் முருகன் கோவிலும் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலையும் சொத்து விவரத்தில் காட்டவில்லை. அந்த முருகன் கோவில் என் அப்பா காலத்தில் கட்டப்பட்டது. அதற்கு பிரதிவாதிகள் தான் வழக்கமாக பூஜைகள் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நாங்கள்

தற்போது அந்த கோவிலுக்கு செல்வதில்லை. நான் தாவா சொத்தில் குடியில்லை. வேறு இடத்தில் இருக்கிறேன். நான் அட்டை வீடு கட்டி குடியிருக்கிறேன். அதற்கு கதவு எண் இல்லை. குமாரபாளையம் சொத்தில் 3ம் வாதி குடியிருக்கிறார். மேற்படி சொத்தை இவ்வழக்கில் காட்ட தவறியதால் இத்தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் யார் யார் கடை நடத்துகிறார்கள் என்று எனக்கு தெரியாது. இரண்டு கடைகளை அவர்களே வைத்துள்ளார்கள். ஒரு கடை யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. முருகனும், மாரியப்பனும் அதை சேர்ந்து அனுபவிக்கிறார்கள். 3ம் வாதி ஈச்சர் லாரி வைத்து தொழில் செய்கிறார் என்றால் சரிதான். நானும் 2 லாரிகள் சொந்தமாக வைத்துள்ளேன். சீரங்கன் உயிருடன் இருந்த போதே மேட்டுகடையில் இருந்த 18 செண்ட் நிலத்தை விற்று விட்டார் என்றால் சரிதான். விற்றது போக மீதம் 4 செண்ட் நிலம் உள்ளது. அதில் ஒரு பாகத்தை சித்தப்பா எடுத்து கொண்டார். ச.எண்.26/7 ஏ-வை எங்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் தற்போது நாங்கள் மட்டும் தான் குடியிருக்கிறோம். அதே போல் குமாரபாளையச் சொத்தில் மாரியப்பன், முருகன், முத்துப்பிள்ளை ஆகியோர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடாச்சிக்காக வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/-கோபால்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி